**பிப்ரவரி – 22**

# TNPSC துளிகள்

- சுற்றுச்சூழல் ரீதியாக நீடித்த நிலைத்தன்மை கொண்ட செயற்கை நுண்ணறிவுக்கான கூட்டணியின் கீழ் 37 தொழில்நுட்ப நிறுவனங்கள், 11 நாடுகள் மற்றும் 5 சர்வதேச அமைப்புகள் உட்பட 100க்கும் மேற்பட்ட பங்குதாரர்கள் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்துள்ளனர்.
- பிரதமர் புது டெல்லியில் முதலாவது SOUL தலைமைத்துவ மாநாட்டினை தொடங்கி வைத்தார்.
- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது, 1938 ஆம் ஆண்டு காப்பீட்டுச் சட்டத்தின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து திருத்தங்களை பரிந்துரைப்பதற்காக தினேஷ் காரா தலைமையிலான ஓர் உயர் அதிகாரக் குழுவை அமைத்துள்ளது.
- கத்தார் நாட்டின் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு இரண்டாவது முறையாக இந்தியாவிற்கு 2 நாட்கள் பயணத்தினை மேற்கொண்டார்.
- மத்திய அரசானது, வங்காளதேசம் மற்றும் பூடான் ஆகிய இரண்டு நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்க உள்ள அசாம் மாநிலத்தின் ஜோகிகோபாவில் அமைக்கப் பட்டுள்ள ஒரு உள்நாட்டு நீர்வழி முனையத்தினை (IWT) திறந்து வைத்துள்ளது.
- இந்தியத் தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) ஆனது, இந்தியாவின் விண்வெளிசார் புத்தொழில் நிறுவனங்களின் ஒரு பெரும் வளர்ச்சியை ஆதரிப்பதற்காக 500 கோடி ரூபாய் மூலதன நிதியுடன் ஒரு புதிய நிதியைத் தொடங்கி உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஐந்து பழங்குடியின சமூகங்களின் இனவரைவியல் ஆவணமாக்கம்

| Characteristic features | Todas | Kotas | Kurumbas | Irulas | Paniyas | Kattunayakas |
|---|---|---|---|---|---|---|
| Subdivisions/ other names | Todas, Todar, Tudavans, Toras | Koter, Kotharu, Kothewar, Kohatur | Alu or Palu Kurumbas, Betta Kurumbas, Jenu or Teen Kurumbas, Mullu Kurumbas, Urali Kurumbas | Erlar (or) Poosari, Eralollu, Irulas, Shikari, Pujari, Iriligaru, Iruliga, Iruvan, Villiar | Kattupaniyar | Sikarinayakan, Kadu or Shola Nayakans, Golla, Irula, Korava, Thottiyan |
| Language | Dravidian language family of Toda (Tamil and Malayalam) | Dravidian language family of Kota (Tamil and Kannada) | Dravidian language family of Kurumba (Tamil and Kannada) | Dravidian language family of Irula (Tamil, Yerukala, Sholaga, and other Tamil languages) | Dravidian language family of Paniya (Tamil and Malayalam) | Dravidian language family (Tamil and Telugu and Malayalam and Kannada) |
| Occupation | Cultivation of vegetables such as potato and cabbage; embroidery | Pottery and carpentry; blacksmiths | Hunters and food gatherers; painting and witchcraft | Rat and snake catchers; fishing | Hunters and food gatherers | Hunters and food gatherers; collection of honey and wax |
| Deity/worships | Lord Shiva and worship many mountains and hills | Worship fire, the moon, and nature | Lord Shiva in the name of Bhairavan and worship animals, birds, trees, rock hillocks, and snakes | Goddess Kanniamma | Kali and worship banyan tree | Lord Shiva in the name of Bhairavan and worship the Goddess Jakkamma and Mallaiyar |

- தமிழ்நாடு மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, அதன் முதன்மையான தொல்குடி திட்டத்தின் கீழ், ஐந்து பட்டியலிடப்பட்ட பழங்குடியினச் சமூகங்களின் இனவரைவியல் / இனக்குழுவியல் ஆவணமாக்கலுக்காக வேண்டி சில

வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

- 2024-25 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், தமிழக மாநிலத்தில் வாழும் பழங்குடியின சமூகங்களின் மொழி மற்றும் கலாச்சாரத்தின் எண்ணிமப் பதிவுகளை உருவாக்கும் திட்டத்திற்கு மாநில அரசானது 2 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.
- இது இருளர்கள், தோடர்கள், நரிக்குறவர்கள், காணிக்கரர்கள் மற்றும் குரும்பர்களின் மொழியியல் வளங்கள் மற்றும் உச்சரிப்பு/ஒலிப்பு வடிவங்களின் எண்ணிமப் பதிவை உள்ளடக்கியது.
- இந்த எண்ணிம ஆவணமாக்கலில, அவர்களின் ஒரு தனியுரிமை மற்றும் வழக்கமான வாழ்க்கையை பாதிக்காமல் அவர்களின் வாழ்க்கை, கதைகள், அவர்களுடன் மிகவும் தொடர்புடைய பல்வேறு சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களின் முறைகளைப் பதிவு செய்வதற்காக வேண்டி மேற்கொள்ளப்படும் பழங்குடியின சமூக உறுப்பினர்களின் நேர்காணல்கள் மற்றும் ஒலி-ஒளிப் பதிவுகள் அடங்கும்.

### ஆசியப் பொருளாதார பேச்சுவார்த்தை 2025




- வருடாந்திரப் புவி சார் பொருளாதார அதிகாரங்கள் மாநாடு ஆன 2025 ஆம் ஆண்டு ஆசியப் பொருளாதார பேச்சுவார்த்தையானது புனேவில் நடைபெற்று வருகிறது.
- இது வெளிவிவகாரங்கள் துறை அமைச்சகம் (MEA) மற்றும் புனே சர்வதேச மையம் (PIC) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த 9வது பேச்சுவார்த்தையின் கருத்துரு, "Economic Resilience and Resurgence in an Era of Fragmentation" என்பதாகும்.

## பொருளாதாரச் செய்திகள்

### மின்னணு மாற்றத்தகு கிடங்கு ரசீதுகளுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்

- மின்னணு மாற்றத்தகு கிடங்கு ரசீது அடிப்படையிலான இணையீட்டு சார் நிதியுதவி மீதான (CGS-NPF) ஒரு கடன் உத்தரவாதத் திட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தி யுள்ளது.

- இந்தத் திட்டம் ஆனது, அறுவடைக்குப் பின்னதாக என மின்னணு மாற்றத்தகு கிடங்கு ரசீதுகளை (e-NWR) கொண்டு விவசாயிகள் பெறும் கடனுக்காக 1,000 கோடி ரூபாய் நிதியை வழங்குகிறது.
- கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் (WDRA) அங்கீகாரம் பெற்ற சில கிடங்குகளில் அப்பொருட்களை இருப்பு வைத்த பிறகு விவசாயிகள் அதற்கான கடன்களைப் பெறுவார்கள்.
- 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு 85% உத்தரவாதம் அளிக்கப்படும்.
- சிறு மற்றும் குறு விவசாயிகள்/பெண்கள்/SC/ST/PwD ஆகியோருக்கு 3 முதல் 75 லட்சம் ரூபாய் வரையிலான கடனுக்கு 80% உத்தரவாதம் அளிக்கப்படும்.




## வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு 2025

Statement 1: LFPR (in per cent) in CWS in urban areas for persons of age 15 years and above

all-India

| survey period | Male | Female | Person |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| October – December 2023 | 74.1 | 25.0 | 49.9 |
| January – March 2024 | 74.4 | 25.6 | 50.2 |
| April – June 2024 | 74.7 | 25.2 | 50.1 |
| July – September 2024 | 75.0 | 25.5 | 50.4 |
| October – December 2024 | 75.4 | 25.2 | 50.4 |


- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் – டிசம்பர் வரையிலான காலாண்டில், நகர்ப்புறங்களில்

15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களிடையே சுமார் 49.9% ஆக இருந்த தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் (LFPR) ஆனது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் – டிசம்பர் மாதம் வரையிலான காலாண்டில் 50.4% ஆக அதிகரித்துள்ளது.

- நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களுக்கான LFPR விகிதம் அதே காலக் கட்டத்தில் 74.1 சதவீதத்திலிருந்து 75.4% ஆக அதிகரித்துள்ளது.
- நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்களுக்கான LFPR ஆனது 25.0 சதவீதத்திலிருந்து 25.2% ஆக அதிகரித்துள்ளது.
- நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களிடையே நிலவும் வேலை வாய்ப்பின்மை விகிதம் (UR) 6.5 சதவீதத்திலிருந்து 6.4% ஆகக் குறைந்துள்ளது.
- 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 5.8% ஆகவே உள்ளது.
- 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டப் பெண்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 8.6 சதவீதத்திலிருந்து 8.1% ஆகக் குறைந்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## காவேரி 2.0 தளம் மீதான DDoS தாக்குதல்




- ஜனவரி மாதத்தில், கர்நாடகாவில் சொத்துப் பதிவுகளை நெறிப்படுத்தும் வலை தளம் அடிப்படையிலான ஒரு இணைய தளமான காவேரி 2.0, அவ்வப்போது, செயல்பாட்டு முடக்கம் சார்ந்த சேவையகக் கட்டமைப்புகளின் செயலிழப்புகளைச் சந்தித்தது.
- இதன் விளைவாக, அந்த மாநிலத்தில் சொத்துப் பதிவு மற்றும் ஆவணம் தொடர்பான குடிமக்கள் சேவைகள் ஸ்தம்பித்தன.
- இது ஒரு “Motivated Distributed Denial of Service (DDoS) -ஒருங்கிணைந்த இணையவெளித் தாக்குதல்” ஆகும்.
- DDoS தாக்குதல் என்பது ஒரு இலக்கு வைக்கப்பட்ட சேவையகம், சேவை அல்லது வலை அமைப்பின் இயல்பான செயல்பாட்டை அதிகபட்ச இணையச் செயல்பாட்டின் மூலம் நிறைக்கச் செய்வதன் மூலம் அதனைச் சீர்குலைக்கச் செய்யும் ஒரு தீங்கிழைக்கும் நோக்கத்திலான முயற்சியாகும்.
- பொதுவாக ஒரு மூலத்தை உள்ளடக்கிய சேவை மறுப்பு (DoS) தாக்குதலைப் போலன்றி,

DDoS வகை தாக்குதலானது இணையச் செயல்பாட்டு நெரிசலை உருவாக்குவதற்காக பெரும்பாலும் தீம்பொருளால் பாதிக்கப்பட்ட பல கட்டுப்பாடு இழந்த அமைப்புகளைப் பயன்படுத்துகிறது.


- இந்தக் கட்டுப்பாடு இழந்த அமைப்புகள் கூட்டாக ஒரு தீம்பொருளால் பாதிக்கப்பட்ட கணினி வலையமைப்பு - போட்நெட் என்று அழைக்கப்படுகின்றன.

## மைக்ரோசாப்ட் - மஜோரானா 1

- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, இதற்கு முன்னதாக அறிமுகப்படுத்தப்பட்டதை விட நம்பகமான மற்றும் அளவிடக் கூடிய குவிட்ஸ்களை கொண்ட மஜோரானா 1 எனப் படும் குவாண்டம் சில்லினை அறிமுகப்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- குவிட்ஸ் என்பவை துளிம / குவாண்டம் கணினிகளின் கட்டமைப்புத் தொகுதிகள் ஆகும்.
- மஜோரானா 1 என்பது எட்டு-குவிட் அளவிலான சில்லு ஆகும் என்பதோடு இது கூகிள் நிறுவனத்தின் வில்லோ (106-குவிட் சிப்) மற்றும் IBM நிறுவனத்தின் R2 ஹெரான் (156-குவிட் சில்லு) போன்ற அதன் போட்டி நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட குவாண்டம் சில்லுகளுடன் ஒப்பிடும் போது ஆற்றல் மிக்கதாக இருக்கலாம்.




## NGC 6505 அண்டத்தினைச் சுற்றி காணப்படும் ஐன்ஸ்டீன் வளையம்




- மிகச் சமீபத்தில், ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) யூக்ளிட் விண்வெளி ஆய்வுக் கலமானது, NGC 6505 என்ற அண்டத்தில் ஒரு ஐன்ஸ்டீன் வளையம் காணப் படுவதைக் கண்டறிந்தது.
- இது பூமியிலிருந்து 590 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

- ஐன்ஸ்டீன் வளையம் என்பது மிகவும் வலுவான ஈர்ப்பு குவிய விளைவின் ஒரு சிறப்பு நிகழ்வாகும்.
- ஐன்ஸ்டீன் அவர்கள், அவற்றின் இருப்பைக் கணித்து 80 ஆண்டுகளுக்குப் பிறகு, 1998 ஆம் ஆண்டில் வானியலாளர்கள் முதலாவது ஐன்ஸ்டீன் வளையத்தைக் கண்டறிந்து உள்ளனர்.
- ஒரு நட்சத்திரம் அல்லது அண்டம் போன்ற தொலைதூரப் பின்னணி பொருளிலிருந்து வரும் ஒளியை ஒரு ஈர்ப்புக் குவியம் நன்கு சிதைக்கும் போது ஒரு ஐன்ஸ்டீன் வளையம் உருவாக்கப்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீலவால் பஞ்சுருட்டான் பறவையின் பதிவு




- தீபகற்ப இந்தியாவில் நீலவால் பஞ்சுருட்டான் பறவையின் (மெரோப்ஸ் பெர்சிகஸ்) முதல் இனப்பெருக்கத் தளம் ஆனது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி சதுப்புநிலங்களுக்கு அருகிலுள்ள ஆண்டிவிலையில் கண்டறியப் பட்டுள்ளது.
- இதன் இனப்பெருக்கம் ஆனது மிக முதன்மையாக நைல் டெல்டா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற சில பகுதிகளில் பதிவு செய்யப் பட்டுள்ள அதே நேரத்தில் அவற்றின் குளிர்கால இனப்பெருக்க நிலங்கள் என்பவை ஆப்பிரிக்காவின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக உள்ளது.
- இப்பறவையின் சில இனப்பெருக்கப் பகுதிகள் ஆனது, பழையார் நதிப் படுகையின் உப்பளங்களில் காணப்பட்டன.

## சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வகையிலான ஆரவல்லிப் பூங்கா திட்டம்

- ஹரியானா அரசாங்கமானது, சுமார் 3,858 ஹெக்டேர் பரப்பில் சுற்றுப் பயணம் மேற் கொள்ளும் வகையிலான ஆரவல்லிப் பூங்கா திட்டத்தினை முன் வைத்துள்ளது.
- இது உலகின் மிகப்பெரிய சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வகையிலான பூங்காவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- முன்மொழியப்பட்ட இந்தப் பூங்காவில் விலங்கு கூண்டுகள், விருந்தினர் இல்லங்கள், சில தங்கும் விடுதிகள், உணவகங்கள், கலையரங்கம், ஒரு விலங்கு மருத்துவமனை, குழந்தைகள் பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள், மீன்வளப் பூங்காக்கள், கம்பிவட

வாகனச் சேவைகள், கண்காட்சிகளுடன் கூடிய ஒரு சுரங்கப்பாதை நடைபாதை, ஒரு திறந்த வெளி திரையரங்கம் மற்றும் உணவகங்கள் இருக்கும்.

- ஹரியானாவில் உள்ள சுமார் 80,000 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஆரவல்லி மலைப் பகுதியில், மிகப் பெரும்பான்மையான பகுதிகள் பல்வேறு சட்டங்களின் கீழும் உச்ச நீதிமன்றம் மற்றும் NGT உத்தரவுகளின் கீழும் பாதுகாக்கப்படுகின்றன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஆசியா மற்றும் பசிபிக் SDG முன்னேற்ற அறிக்கை 2025




- இது ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தினால் (ESCAP) வெளியிடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டில் சுமார் 54 சதவீதக் குறிகாட்டிகள் ஆனது குறைந்தது இரண்டு தரவு புள்ளிகளைக் கொண்டுள்ளதுடன் ஆசியா மற்றும் பசிபிக் நாடுகள் நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது.
- மிகக் குறிப்பாக வயது, உடல் குறைபாடு, பாலினம் மற்றும் இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு தொடர்பாக குறிப்பிடத்தக்க சில இடைவெளிகள் உள்ளன.
- 17 நிலையான மேம்பாட்டு இலக்குகள் (SDGs) ஆனது, 2030 ஆம் ஆண்டிற்குள் அடையப் பட வேண்டுமானால் அவசர நடவடிக்கை தேவை என்று இந்த அறிக்கை எச்சரித்தது.

## குவாண்டம் பொருளாதாரம் குறித்த WEF அறிக்கை


- "Embracing the Quantum Economy: A Pathway for Business Leaders" என்று பெயரிடப்பட்ட ஒரு அறிக்கையினை உலகப் பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ளது.

- இது குவாண்டம் தொழில்நுட்பங்களின் மாறுதல் மிக்க திறனை எடுத்துக்காட்டுகிறது மற்றும் வணிகங்கள் அவற்றின் பொருளாதார மதிப்பைப் பயன்படுத்துவதற்கான ஒரு செயல் திட்டத்தினை வழங்குகிறது.
- உலகளாவிய குவாண்டம் தொழில்நுட்பச் சந்தை ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 125 பில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சுகாதாரம், நிதி, தளவாடங்கள் மற்றும் எரிசக்தி போன்ற துறைகள் கணிசமாக பயன் அடையும்.
- அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா போன்ற குவாண்டம் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மேம்பாட்டில் முதலீடு செய்யும் நாடுகள் ஆனது, பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப முன்னணித்துவத்தில் பல்வேறு உத்தி சார் நன்மைகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.




# மாநிலச் செய்திகள்

## பத்தல் கிராமத்தில் ஆர்கனோபாஸ்பேட் நச்சு




- ஜம்மு-காஷ்மீரின் பத்தல் என்ற கிராமத்தில் பதட்ட நிலையை ஏற்படுத்திய 17 பேரின் உயிரிழப்பிற்கு ஆர்கனோபாஸ்பேட் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.
- இந்த இரசாயனங்கள் ஆனது தீங்குயிர்க் கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளில்

பயன்படுத்தப்படுகின்றன.

- ஆர்கனோபாஸ்பேட்டுகள் என்பது மிகப் பொதுவாக பூச்சிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்கவும், பூச்சிகளால் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தச் செய்யவும் என்று பயன்படுத்தப் படுகின்றன.
- அவை இந்த நச்சினால் மிகவும் கடுமையாகத் தாக்கப்படும் உயிரினங்களில் நரம்பு சமிக்ஞைகளின் பரவலைச் சீர்குலைப்பதன் மூலம் கடும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.
- ஆர்கனோபாஸ்பேட்டுகள் என்பது செயற்கை இரசாயனங்கள் ஆகும்.
- ஆரம்பத்தில் நரம்புத் தூண்டுதல் முகவர் காரணியாக இராணுவப் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட இவை பின்னர் வேளாண் நோக்கங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப் பட்டன.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## 2024 ஆம் ஆண்டிற்கான BBC விருது பெற்றவர்கள்

- ஒலிம்பிக் பதக்கம் வென்ற துப்பாக்கி சுடும் வீராங்கனை மனு பாக்கர், 2024 ஆம் ஆண்டிற்கான BBC இந்திய விளையாட்டு வீராங்கனை விருதை வென்றுள்ளார்.
- ஷீத்தல் தேவி (வில்வித்தை) BBCயின் வளர்ந்து வரும் வீராங்கனை விருதை வென்று உள்ளார்.
- மிதாலி ராஜ் (கிரிக்கெட்) வாழ்நாள் சாதனையாளர் விருதை வென்றுள்ளார்.
- அவனி லேகரா (துப்பாக்கி சுடுதல்) விருது வழங்கப்பட்ட ஆண்டின் சிறந்த இந்திய மாற்றுத் திறனாளி விளையாட்டு வீராங்கனை விருதை வென்றுள்ளார்





# இதரச் செய்திகள்


## நியோதெதிஸ் பெருங்கடல் தட்டு

- ஒரு காலத்தில் அரேபிய மற்றும் யூரேசியக் கண்டங்களுக்கு அடியில் அமைந்திருந்த நியோதெதிஸ் பெருங்கடல் தட்டானது கிடைமட்டமாக உடைந்து வருவதை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த மாபெரும் கட்டமைப்பு மாற்றம் ஆனது ஜாக்ரோஸ் என்ற மலைகளுக்கு அடியில்

நடைபெற்று வருகிறது.

- இது தென்கிழக்குத் துருக்கி, வடமேற்கு ஈரான் மற்றும் ஈராக்கின் குர்திஸ்தான் பகுதி முழுவதும் பரவியுள்ள ஒரு பரந்த மலைத்தொடராகும்.
- மில்லியன் கணக்கான ஆண்டுகளாக, அரேபிய மற்றும் யூரேசியத் தட்டுகள் மோதிக் கொள்கின்றன என்ற நிலையில் இந்த ஒரு நிகழ்வானது இந்தப் பெருங்கடல் தட்டினை பூமியின் மூடகத்தினுள் கீழ் நோக்கித் தள்ளியுள்ளது.
- இந்தச் செயல்முறை தொடர்ந்து நிகழ்ந்த போது, கீழிறங்கும் ஒரு கடல் தட்டானது ஒரு நங்கூரம் போல செயல்பட்டு, பூமியின் மேலோட்டினை நன்கு இழுத்து, சில மில்லியன் கணக்கான ஆண்டுகளாகக் குவிக்கப்பட்ட வண்டலைக் கொண்ட ஒரு மாபெரும் பள்ளத்தை உருவாக்குகிறது.
- அரேபிய மற்றும் யூரேசியத் தட்டுகள் மோதி, ஜாக்ரோஸ் மலைகளை மேலே தள்ளி, காலப் போக்கில் அரிக்கப்பட்டு வண்டல்கள் படியும் போது மெசொப்பொத்தேமிய சமவெளிகள் உருவாகின்றன.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★